பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
10 11 2024 **SUNDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தூய்மையே சேவை இயக்கம் மிகப்பெரிய அளவில் வெற்றிபெற்றுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. பட்டாசு தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் உயிரிழக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான உயர்கல்வி வரையிலான கல்விச்செலவை தமிழக அரசே ஏற்கும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. மின்கட்டணம் மற்றும் சொத்துவரி உயர்வை திமுக அரசு திரும்பப்பெற வேண்டும் என்று தேமுதிக வலியுறுத்தியுள்ளது.

5. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான உலக துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>>>><<<<<<<<

தூய்மையே சேவை இயக்கம் மிகப்பெரிய அளவில் வெற்றிபெற்றுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு வெற்றி நிச்சயம் என்பதை இது உணர்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் அலுவலக இணையமைச்சர திரு ஜிதேந்திர சிங்கின் சமூக வலைதள பதிவையும் திரு நரேந்திர மோடி பகிர்ந்துள்ளார்.

இந்த இயக்கம் தொடங்கப்பட்ட 2021-ஆம் ஆண்டு முதல் பழையப்பொருட்களை விற்பனை செய்ததன் மூலம், இதுவரை அரசுக்கு 2 ஆயிரத்து 364 கோடி ரூபாய் வருவாய் கிடைத்திருப்பதாக திரு ஜிதேந்திர சிங் அந்த பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

>>>>>>><<<<<<<

அனைத்து தரப்பு மக்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் நடைபெற்ற பிஜேபி தேர்தல் குழு பயிலரங்கில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் (1) 53 செகண்ட்ஸ்)*

பிஜேபி-யில் மட்டும்தான் ஜனநாயக ரீதியில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவதாக திரு எல். முருகன் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் (2) 30 செகண்டஸ்)*

>>>>>>><<<<<<<<

பட்டாசு தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் உயிரிழக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான உயர்கல்வி வரையிலான கல்விச் செலவை தமிழக அரசே ஏற்கும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் பட்டாம்புதூரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், இதற்காக தனிநிதியம் ஏற்படுத்தப்படும் என்று கூறினார்.

முதல்கட்ட உதவியாக ஐந்து கோடி ரூபாயை அரசு வழங்கும் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

சிவகாசி மாநகராட்சியில் 15 கோடி ரூபாய் செலவில் மாநாட்டு அரங்கம் அமைக்கப்படும், சாத்தூர் நகராட்சியில் 2 கோடி ரூபாய் செலவில் பூங்கா மற்றும் சிறுபாலம் அமைக்கப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் முதலமைச்சர் இந்த நிகழ்ச்சியில் வெளியிட்டார்.

>>>>>>><<<<<<<<

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பழைய ஓய்வூதியத் திட்டம் இதுவரை செயல்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<<

தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்று தேமுதிக வலியுறுத்தியுள்ளது.

இன்று சென்னையில் நடைபெற்ற அக்கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சொத்துவரி உயர்வை தமிழக அரசு திரும்பப்பெற வேண்டும்,

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்,

மின்கட்டண உயர்வை திரும்பப்பெற வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

>>>>>>><<<<<<<<

நடிகர் டில்லி கணேஷின் மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், அவரது நடிப்புத் திறன் தலைமுறை தாண்டி போற்றப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேடை நாடகங்களிலும் தனி முத்திரை பதித்தவர் டில்லி கணேஷ் என்று பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

>>>>>>><<<<<<<<

பிரபல எழுத்தாளர் திரு இந்திரா சௌந்தராஜன் இன்று மதுரையில் காலமானார். அவருக்கு வயது 66.

முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உட்பட தலைவர்கள் பலர் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>>>>><<<<<<<<

நெல்லை தாமிரபரணி ஆற்றில் கழிவுகள் கலப்பது தொடர்பான வழக்கு குறித்து, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் திரு ஜி ஆர் சுவாமிநாதன் மற்றும் திரு புகழேந்தி, அந்த ஆற்றின் பல்வேறு பகுதிகளில் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

தாமிரபரணியின் கரைப்பகுதிகள், கழிவுநீர் கலக்கும் இடங்கள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நீதிபதிகள் இந்த ஆய்வினை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - திருமலைக்குமார் - 48 செகண்ட்ஸ் )*

>>>>>>><<<<<<<<

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த 36 மணிநேரத்தில் உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இது, இலங்கை – தமிழக கடற்கரையை நோக்கி நகர வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<<

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாநகராட்சிக்கு உட்பட்ட முதலைப்பட்டி அருகே புதிதாக திறக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>>><<<<<<<<

மதுரை ரயில் நிலையத்தின் நுழைவு வாயில் மறுசீரமைப்புப்பணிகளுக்காக மாற்றப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<<

தூத்துக்குடி புதிய துறைமுகம் பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த 2 ஆயிரம் கிலோ பீடி இலைகளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

>>>>>>><<<<<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான உலக துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா, இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

தில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் பத்து மீட்டர் கலப்பு இரட்டையர் பிரிவில் **Palak Gulia – Amit Sharma** இணை தங்கப்பதக்கம் வென்றது.

ஆடவர் 50 மீட்டர் பிரிவில் **Aishwary Pratap Singh** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 3 தங்கம், 4 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

>>>>>>><<<<<<<<

உலக தற்காப்புக்கலை சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

தாஷ்கண்டில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 115 கிலோ எடைப்பிரிவில் **Fathima Afshan** வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் 145 கிலோ எடைப்பிரிவில் **Surabhi Sankhla** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>>>><<<<<<<<

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான இரண்டாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Gqueberha**-வில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

நான்கு போட்டிகளை கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்று இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

>>>>>>><<<<<<<

போலந்தில் நடைபெற்றுவரும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Stithapragnya Reddy** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-9, 22-10 என்ற செட் கணக்கில், சைப்ரசின் **Nikolas Kokosis** –ஐ வென்றார்.

>>>>>>><<<<<<<<

தெலங்கானா சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Isharani Baruah** –வும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Rithvik Sanjeevi Satish Kumar** –ம் பட்டம் வென்றனர்.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் **Pruthvi Krishnamurthy Roy – Sai Pratheek** இணையும், மகளிர் இரட்டையர் பிரிவில் **Priya – Shruti** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் **Rohan Kapoor – Ruthvika Shivani** இணையும் பட்டம் வென்றன.

>>>>>>>**END**<<<<<<<